**உடுமலைப்பேட்டை நகராட்சி**

**28.5.2018 ம் தேதிய சாதாரணக்கூட்ட மன்ற நிரல்**

| Sl No | MCR No | Subjects in Agenda | Decision of the council |
|---|---|---|---|
| **1** | 590 | உடுமலைப்பேட்டை நகராட்சிக்குச் சொந்தமான குத்தகை இனங்களில் ஏலம் போகாமல் காலியாக உள்ள கடைகள் மற்றும் குத்தகை உரிமம் புதுப்பிக்காமல் நகராட்சி வசம் ஒப்படைத்த கடைகளுக்கு 2018 முதல் 2021 வரையிலான காலத்திற்கு கடைகளை ஏலம் மற்றும் மறுஏலம் விட ஒப்பந்தப்புள்ளி கோர ஏல மற்றும் ஒப்பந்தப்புள்ளி விளம்பரத்தினை நாளிதழில் விளம்பரப்படுத்திடவும் மேற்படி கடைகள் ஏலம் போகும் வரை 2018-2019ம் ஆண்டுக்கான இதுதொடர்பான அனைத்து செலவினங்களுக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**<br>1. ஒப்புதல் அளிக்கலாம்.<br>2. ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோர மற்றும் சிறப்பு நிபந்தணைகளை அங்கீகரிக்கலாம்.<br>3. ஏல நிபந்தனைகளை அச்சிடவும், அவ்வப்போது நாளிதழ்களில் ஏல விளம்பரம் செய்யவும். இது சம்பந்தமான அனைத்து செலவினங்களுக்கும் ஒப்புதல் அளிக்கலாம்.<br>**ந.க.எண் 10039/2017/அ2** | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |
| **2** | 591 | உடுமலைப்பேட்டை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட பாதாள சாக்கடை மற்றும் குடிநீர் அபிவிருத்தி திட்டப்பணிகளால் சேதமடைந்துள்ள சாலைகள் மற்றும் மழைக்காலங்களில் சேதமடைந்துள்ள சாலைகளை கீழ்க்கண்ட விபரப்படி மறுசீரமைப்பதற்கு TURIP 2018-2019 திட்டத்தின் கீழ் ரூ.5.00 கோடி செலவில் மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே தயாரிக்கப்பட்டுள்ள பிரேரணைகளை நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களுக்கு அனுப்பி உரிய நிர்வாக அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**TURIP 2018–2019 திட்டத்தின் கீழ் மறுசீரமைக்கப்படவுள்ள சாலைகளின் விபரங்கள்** | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |

| சிப்பம் எண் | சாலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்ச த்தில்) |
|---|---|---|
| 1. | உடுமலைப்பேட்டை நகராட்சிக்கு சொந்தமான சிவசுப்பிரமணி வீதி, சரோஜினி சந்து, பாரதி சந்து, கண்ணகி சந்து, எஸ்வி மில் 1வது, 2வது, 3வது, 4வது, 5வது, 6வது, 7வது, 8வது மற்றும் 9வது வீதிகள், காந்தி சந்து 1வது, 2வது, 3வது, 4வது, 5வது, 6வது மற்றும் 7வது சந்துகள், உடையார் சந்து, தாஸ் சந்து, தாஸ் சந்து கிராஸ் ரோடு, கவிராயர் சந்து, கவிராயர் 2வது சந்து, கவிராயர் 3வது மற்றும் 4வது சந்துகள், ஔவையார் சந்து, பெருமாள் கோவில் சந்து, தங்கம்மாள் ஓடை 2வது சந்து, தங்கம்மாள் ஓடை 3வது சந்து, தங்கம்மாள் ஓடை 4வது சந்து, தங்கம்மாள் ஓடை 5வது சந்து, தங்கம்மாள் ஓடை 6வது மற்றும் 7வது சந்துகள், ஜெய்லானி 3வது சந்து, ஜெய்லானி 4வது சந்து, ஜெய்லானி 5வது சந்து, ஜெய்லானி 6வது சந்து, நெல்லுக்கடை வீதி 2வது சந்து, நெல்லுக்கடை | 194.00 |

| | | |
|---|---|---|
| | வீதி 3வது சந்து (எம்ஆர்டி), நெல்லுக்கடை வீதி 4வது சந்து (மாரியப்பா சந்து) காதர்கான் 1வது சந்து (மீனாட்சி சுந்தரம் சந்து), காதர்கான் 2வது சந்து, காதர்கான் 3வது சந்து, சதாசிவம் 2வது சந்து, சதாசிவம் 3வது சந்து (நூர் சந்து) மற்றும் சதாசிவம் 4வது சந்து, காமாட்சி சந்து, பிச்சுக்குட்டி சந்து, ஜானி பேகம் 3வது சந்து, ஜானி பேகம் 4வது சந்து, குமரன் 1வது சந்து, குமரன் 2வது சந்து, காமராஜ் 1வது சந்து, காமராஜ் 2வது சந்து, காமராஜ் 3வது சந்து மற்றும் காமராஜ் 4வது சந்து, அமணலிங்க 1வது குறுக்கு மற்றும் 2வது குறுக்கு வீதிகள், கருணாநிதி காலனி மெயின் ரோடு, கருணாநிதி காலனி 1வது சந்து, கருணாநிதி காலனி 2வது சந்து, கருணாநிதி காலனி 3வது சந்து மற்றும் கருணாநிதி காலனி 4வது சந்து, டிவி பட்டிணம் 1வது சந்து, 2வது சந்து, 4வது சந்து, 6வது சந்து மற்றும் 7வது சந்துகள், யூனியன் ஆபீஸ் கிராஸ் ரோடு ஆகிய பகுதிகளில் பேவர் பிளாக் அமைக்கும் பணி | |
| 2. | உடுமலைப்பேட்டை நகராட்சிக்கு சொந்தமான வேலன் நகர் 9வது வீதி, அனுஷம் நகர் பை-பாஸ் ரோடு, அனுஷம் நகர் 1வது வீதி, அனுஷம் நகர் கிராஸ் ரோடு, ஆண்டாள் சீனிவாசா கிராஸ் ரோடு-1 மற்றும் ஆண்டாள் சீனிவாசா கிராஸ் ரோடு- 2 ஆகிய பகுதிகளில் உள்ள தார்சாலைகளை மறுசீரமைக்கும் பணி | 119.00 |
| 3 | உடுமலைப்பேட்டை நகராட்சிக்கு சொந்தமான சாய்ராம் லே அவுட் 3வது வீதி, சாய்ராம் லே அவுட் 4வது வீதி, சாய்ராம் லே அவுட் 5வது வீதி, சாய்ராம் லே அவுட் கிராஸ் ரோடு, ஸ்ரீராம் நகர் 4வது மற்றும் 5வது வீதிகள், வாசவி நகர் 1வது கிராஸ் ரோடு, வாசவி நகர் 3வது வீதி, வாசவி நகர் 4வது வீதி, வாசவி நகர் 5வது வீதி, வாசவி நகர் 6வது வீதி, யுகேசி நகர் 4வது வீதி, யுகேசி நகர் கிராஸ் ரோடு, தங்கம்மாள் ஓடை ரோடு, பத்ரகாளியம்மன் லே அவுட் 1வது தெரு, பத்ரகாளியம்மன் லே அவுட் 2வது வீதி, சிங்கப்பூர் நகர் 1வது வீதி, சிங்கப்பூர் நகர் 2வது வீதி, கோவிந்தசாமி லே அவுட், யுஎஸ்எஸ் காலனி 1வது வீதி, யுஎஸ்எஸ் காலனி 2வது வீதி, யுஎஸ்எஸ் காலனி 3வது வீதி, யுஎஸ்எஸ் காலனி 4வது வீதி, யுஎஸ்எஸ் காலனி 5வது வீதி, யுஎஸ்எஸ் காலனி 6வது வீதி ஆகிய பகுதிகளில் உள்ள தார்சாலைகளை மறுசீரமைக்கும் பணி | 187.00 |
| | **மொத்த மதிப்பீட்டு தொகை ரூ.** | **500.00** |

**<u>அலுவலகக்குறிப்பு:–</u>** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண் 1887/2018/இ1**

| | | | |
|---|---|---|---|
| **3** | 592 | இந்நகராட்சி அலுவலகம் மற்றும் பேருந்து நிலையத்தில் 6 எண்கள் “பெஸ்ட் வாட்டர் டாக்டர்” தயாரிப்பு குடிநீர் சுத்திகரிப்பு சாதனங்கள் (மாடல் : HIMA 7 NHC) பொருத்தப்பட்டு இந்நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி சாதனங்களின் வருடாந்திர பராமரிப்பு மேற்படி சாதனங்களின் தயாரிப்பு நிறுவனமான மெசர்ஸ்.கிராஸ்பீல்ட்ஸ், கோயம்புத்தூர் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி பராமரிப்பு ஒப்பந்தம் கடந்த 30.04.2018 உடன் முடிவு பெற்று விட்டதால், தொடர்ந்து 01.05.2018 முதல் 30.04.2019 வரை ஒரு வருட காலத்திற்கு மேற்படி நிறுவனம் மூலம் மேற்கொள்ளவும், மேற்படி நிறுவனத்தின் வருடாந்திர பராமரிப்பு விலைப்புள்ளியின்படி வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்த செலவினம் ரூ.53100/–க்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:–** மன்றம் அனுமதி வழங்கலாம்<br>**ந.க.எண் 1650/2018/இ2** | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |
| **4** | 593 | இந்நாகராட்சிக்குபட்ட மத்திய பேருந்து நிலைய உட்புறம் உள்ள மழைநீர் வடிகால் சேதமடைந்துள்ளதால் கழிவுநீர் மற்றும் மழைநீர் வெளியேறுவதற்கு வழியில்லாமல் உள்ளது இதனால் பொதுமக்கள் மற்றும் பேருந்து நிலையத்துக்கு வரும் பயணிகள் மிகுந்த பாதிப்படைவதால் ரூ.2.90 இலட்சத்திற்கு பழைய மழைநீர் வடிகால் அகற்றிவிட்டு புதிதாக மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பிட்டுற்கு செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகின்றது.<br>அலுவலகக்குறிப்பு:-<br>1. மேற்படி பணியின் அவசரம் அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண் 924/2018/இ1** | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |
| **5** | 594 | இந்நகராட்சிக்குபட்ட வார்டு எண்: 20 சர்தார் விதியில் அமைந்துள்ள பொது சுகாதாரப்பிரிவு அலுவலக வளாகத்தில் திடக்கழிவு வேளாண்மை குப்பை அப்புறப்படுத்தும் வாகனங்கள் தற்போது நிறுத்தப்பட்டு வருகிறது. மேற்படி வளாகத்தில் உள்ள முன்புற நுழைவாயில் கதவு சேதமடைந்துள்ளதால் பூட்ட இயலாத நிலையில் உள்ளத்தால் பாதுகாப்பு இல்லாமல் உள்ளது எனவே மேற்படி இடத்தில் cattle yard அமைப்பதற்கு ரூ.0.40 இலட்சத்திற்கு மதிப்பிடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பிட்டுற்கு செலவினம் மேற்கொள்ளவும் மேற்படி பணியில் அவசர அவசியம் கருதி இந்நகராட்சியின் பதிவு பெற்ற ஒப்பந்தரர் M/S குப்புசாமி & சான்ஸ் அவர்கள் மூலம் பணி மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகின்றது.<br>அலுவலக குறிப்பு : மேற்படி பணியின் அவசரம் அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண் 1061/2018/இ1** | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |
| **6** | 595 | உடுமலைப்பேட்டை நகராட்சிக்குட்பட்ட தனியார் கல்வி நிறுவன கட்டிடங்கள் மற்றும் அரசு உதவி பெற்று சுய நிதி படிப்புகளை நடத்தி வரும் கல்வி நிறுவன கட்டிடங்கள் மீது சொத்துவரிவிதிக்க சட்ட திருத்தம் தமிழ்நாடு அரசிதழ் அறிவிப்பு நாள் 25.1.2018-ல் செய்யப்பட்டுள்ளது.<br><br>அதன்படி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 83-ன்படி நியாயமான வருடாந்திர வாடகையின் அடிப்படையில் நகராட்சியால் சொத்துவரியானது விதிக்கப்படுகிறது. மேலும் வரிவிதிப்பு விதி 6எ-ன்படி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் வழிகாட்டுதலின்படி சொத்துவரியினை நிர்ணயம் செய்ய வழிவகை ஏற்பட்டுள்ளது.<br><br>தமிழ்நாடு நகராட்சி சட்டங்கள் (இரண்டாம் திருத்தம்) சட்டம் 2018 ( 2108 தமிழ்நாடு சட்டம் 6)ல் தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 83(1)(சி)க்கு கீழ்க்கண்டவாறு சட்டத் திருத்தம் வெளியிடப்பட்டுள்ளது. | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | | அதன்படி இது தொடர்பாக உடுமலைப்பேட்டை நகராட்சி தனி அதிகாரி/நகர்மன்றத் தீர்மானம் எண்.560 நாள் 28.3.2018-ல் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் அடிப்படையில் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டு பொதுமக்களிடமிருந்து 30 நாட்களுக்குள் ஆட்சேபணைகள் ஏதுமிருப்பின் அதனை குறிப்பிட்ட நாட்களுக்குள் எழுத்து மூலமாக ஆணையர், உடுமலைப்பேட்டை நகராட்சி என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க கேட்டுக் கொள்ளப்பட்டது. ஆட்சேபணைகள் மற்றும் கருத்துருக்கள் ஏதும் பெறப்படவில்லை.<br><br>அதன்படி கல்வி நிறுவனங்களுக்கு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 83(1) (சி)க்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி விலக்கு அளிக்கப்பட்ட கல்வி நிறுவனம் தவிர்த்து ஏனைய கல்வி பயன்பாட்டிற்கான கட்டிடங்கள் உட்பட ஏனைய கட்டிடங்கள் (தனியார் கல்வி நிறுவனக் கட்டிடங்கள் மற்றும் அரசு உதவி பெற்று சுயநிதி படிப்புகளை நடத்தி வரும் கல்வி நிறுவனக் கட்டிடங்கள் ) மீது சொத்து வரிவிதிக்கவும், அதனை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 83(1)(சி)க்கு திருத்தம் வெளியிடப்பட்டுள்ள காலமான2017-18ஆம் இரண்டாம் அரையாண்டிலிருந்து மேற்படி கல்வி நிறுவனக் கட்டிடங்களுக்கு சொத்துவரி விகிதத்தில் 1.5 மடங்கு சொத்து வரியாக விதிக்கவும் மன்றத்தின் பதிவுக்கும் மற்றும் ஒப்புதலுக்கு வைக்கப்படுகின்றது.<br><br>**அலுவலகக் குறிப்பு:-**<br><br>மேற்கண்ட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 83(1)(சி)க்கு தனியார் கல்வி நிறுவன கட்டிடங்கள் மற்றும் அரசு உதவி பெற்று சுய நிதிபடிப்புகளை நடத்தி வரும் கல்வி நிறுவன கட்டிடங்கள் மீது சொத்து வரி விதிக்க சட்ட திருத்தம் செய்யப்பட்டதை தொடர்ந்து இதன்மீது ஆட்சேபணைகளை அளிப்பதற்காக பொதுமக்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் அறியும் வண்ணம் தினச்செய்தி நாளிதழில் 10.4.2018ஆம் தேதி மற்றும் விளம்பர பலகையில் விளம்பரம் செய்யப்பட்டது. விளம்பரம் செய்யப்பட்ட நாளிலிருந்து 30 நாட்கள் கடந்த நிலையில் சொத்துவரிவி திப்பு குறித்து ஆட்சேபணைகள் ஏதும் கிடைக்கப்பெறவில்லை. எனவே தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 83(1)(சி)-ன்படி 1.10.2017 இரண்டாம் அரையாண்டு முதல் சொத்துவரியினை கல்வி நிறுவனங்களுக்கு 1.5 மடங்கு சொத்துவரி விதிக்க மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>(ந.க.எண் 1172/2018/அ1) | |
| **7** | 596 | உடுமலைப்பேட்டை நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை மேம்படுத்தும் பொருட்டு நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் உத்திரவின்படி கீழ்க்கண்ட இடங்களில் "Micro Composting Centre" தேர்வு செய்யப்பட்டுள்ளன.<br>1. நகராட்சி சந்தை வளாகம் - ரூ.40.00 இலட்சம்<br>2. சிங்கப்பூர் நகர் சுகாதார வளாகம் - ரூ.27.00 இலட்சம்<br>3. முனீர் நகர் - ரூ.34.00 இலட்சம்<br>4. பேட்டரி ஆபரேட்டர் வாகனம் - ரூ.18.00 இலட்சம்<br>(பேட்டரி வாகனம்-10 எண்ணிக்கை)<br>-----------------------------<br>மொத்தம் - ரூ.119.00 இலட்சம்<br>-----------------------------<br>எனவே மேற்கண்ட இடங்களில் தடுப்புச்சுவர், Stroage Room மற்றும் அனைத்து அடிப்படை கட்டமைப்பு வசதிகளுடன் அமைக்கும் பணிக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு உரிய நிர்வாக அனுமதி வேண்டியும், மேலும் மேற்கண்ட பணிக்கு ஆகும் செலவினத்தினை அரசிடமிருந்து முழு மானியமாக பெற்று பணியினை மேற்கொள்ளவும், நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களுக்கு உரிய கருத்துருக்கள் அனுப்புவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண்.**834**/2018/இ1 | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |

<table>
<tr>
<td>8</td>
<td>597</td>
<td>உடுமலைப்பேட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.22ல் உள்ள பழனியாண்டவர் நகர் பகுதியில் தார்சாலை அமைக்கப்பட உள்ளதால் நகராட்சி துவக்கப்பள்ளியின் எதிரில் போக்குவரத்துக்கு இடையூறாக ரோட்டின் நடுவில் உள்ள மின் வாரிய கம்பத்தினை அகற்றி தருமாறு அப்பகுதி பொதுமக்கள் கோரியதின் பேரில் மேற்படி மின்கம்பத்தினை மின் வாரியம் மூலம் அகற்றிடவும், அதற்காகும் மதிப்பீட்டு தொகை ரூ.8250/-ஐ தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் லிமிடெட் (கிராமியம் கிழக்கு)-க்கு செலுத்திடவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:-</u> மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண்.500/2018/இ2</td>
<td>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>9</td>
<td>598</td>
<td>உடுமலைப்பேட்டை நகராட்சிக்குட்பட்ட யு.எஸ்.எஸ் லே அவுட் விரிவில் பாதாள சாக்கடை ஆள்நுழை குழிகள் மற்றும் வீட்டு இணைப்பு குழாய்கள் அமைக்கும் பணி ரூ.1.70 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மானம் எண்.433 நாள்:- 01.11.2017-ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. 25.04.2018ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன அவை,
<table>
<tr><td>1.</td><td>திரு.ஆர்.சுப்பிரமணியன், ரெட்டியப்பட்டி</td><td>:</td><td>மதிப்பீட்டை விட 4.52% அதிகம்</td></tr>
<tr><td>2.</td><td>M/s.RSM & Co, உடுமலைப்பேட்டை</td><td>:</td><td>மதிப்பீட்டை விட 10.14% அதிகம்</td></tr>
</table>
எனவே மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக கொடுத்துள்ள திரு.ஆர்.சுப்பிரமணியன், ரெட்டியப்பட்டி (மதிப்பீட்டை விட 4.52% அதிகம்) ஒப்பந்ததாரரிடம் விலைக்குறைப்பு (Negotiation) கேட்கப்பட்டதில் விலைகுறைப்பு செய்ததில் மதிப்பீட்டை விட 4.32% அதிகமாக கொடுத்துள்ளார்.<br>எனவே மேற்கண்ட திரு.ஆர்.சுப்பிரமணியன், ரெட்டியப்பட்டி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:–</u> மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண்.7963/2017/இ2</td>
<td>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>10</td>
<td>599</td>
<td>உடுமலைப்பேட்டை நகராட்சிக்குட்பட்ட யு.எஸ்.எஸ் லே அவுட் விரிவில் மழைநீர் வடிகால் அமைத்தல் பணி மற்றும் தார்சாலை சீரமைத்தல் (Double Layer WBM with BT Road) பணி ரூ.2.55 இலட்சம் மதிப்பீட்டில் மாவட்ட ஆட்சியர்/தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திருப்பூர் அவர்களின் செயல்முறைகள் உத்திரவு ந.க.எண்.1175/2017/அ6 நாள்:- 09.03.2018-ன்படி பாராளுமன்ற உறுப்பினர் வளர்ச்சி திட்டம் 2017-2018ன் கீழ் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. 25.04.2018ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன அவை,
<table>
<tr><td>1.</td><td>திரு.வி.சிதம்பரம், உடுமலைப்பேட்டை</td><td>:</td><td>மதிப்பீட்டை விட 8.09% அதிகம்</td></tr>
<tr><td>2.</td><td>திரு.எம்.கே.சுரேஷ்குமார், உடுமலைப்பேட்டை</td><td>:</td><td>மதிப்பீட்டை விட 4.93% அதிகம்</td></tr>
</table>
எனவே மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக கொடுத்துள்ள திரு.எம்.கே.சுரேஷ்குமார், உடுமலைப்பேட்டை (மதிப்பீட்டை விட 4.93% அதிகம்) ஒப்பந்ததாரரிடம் விலைக்குறைப்பு (Negotiation) கேட்கப்பட்டதில் விலைகுறைப்பு செய்ததில் மதிப்பீட்டை விட 4.73% அதிகமாக கொடுத்துள்ளார்.<br>எனவே மேற்கண்ட திரு.எம்.கே.சுரேஷ்குமார், உடுமலைப்பேட்டை ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:–</u> மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண்.7963/2017/இ2</td>
<td>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr><td>11</td><td>600</td><td>இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மேற்கொள்ளப்பட்ட பாதாள சாக்கடை திட்டப்பணிகள் முடிவுற்று தற்சமயம் நகராட்சி மூலம் வீட்டு இணைப்புக் குழாய்கள் கொடுக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் பாதாள சாக்கடை பணிக்காக தோண்டப்பட்ட சாலைகள் அனைத்தும் வெவ்வேறு திட்டங்களின் கீழ் (Infra Gap Filling Fund, SRP, General Fund, TURIP) மறுசீரமைக்கும் பணியானது முடிவுற்றது. இந்நகராட்சியால் சீரமைக்கப்பட்ட சாலைகளில் ஆள்நுழை குழாய்கள் (Manholes) சாலைகளிலிருந்து மிகவும் உயரமாகவோ அல்லது தாழ்வாகவோ உள்ளதால் பொதுமக்களுக்கும், வாகன ஓட்டிகளுக்கும் மிகவும் இடையூறாக உள்ளது. எனவே மேற்கண்ட சாலைகளில் உள்ள 1800 ஆள்நுழை குழாய்களை சாலையின் மட்டத்திற்கு அமைப்பதற்கு ரூ.40.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு உரிய நிர்வாக அனுமதி வேண்டியும், மேலும் மேற்கண்ட பணிக்கு ஆகும் செலவினத்தினை அரசிடமிருந்து முழு மானியமாக பெற்று பணியினை மேற்கொள்ளவும், நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களுக்கு உரிய கருத்துருக்கள் அனுப்புவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு :</u> மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண்.1599/2015/இ1</td><td>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது.</td></tr>
<tr><td>12</td><td>601</td><td>இந்நகராட்சி மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகளில் பகல் மற்றும் இரவு நேரக்காவல் பணிகள் மற்றும் குடிநீர் விநியோகப் பணிகளுக்காக ஒப்பந்த அடிப்படையில் 10 பணியாளர்கள் (ஆண்கள் சுயஉதவிக் குழுக்கள் மூலம்) நிர்ணயம் செய்தல் பணி ரூ.9.75 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.577 நாள்:13.04.2018–ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு. 25.05.2018ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன அவை,
<table>
<tr><td>1.</td><td>APJ Abdul Kalam Gents Suya Udhavikulu, Udumalpet</td><td>:</td><td>மதிப்பீட்டை விட 2.64% அதிகம்</td></tr>
<tr><td>2.</td><td>Nanpargal Gents Suya Udhavikulu, Udumalpet</td><td>:</td><td>மதிப்பீட்டை விட 0.29% குறைவு</td></tr>
</table>
மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள Nanpargal Gents Suya Udhavikulu, Udumalpet (மதிப்பீட்டை விட 0.29% குறைவு)–ன் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக் கொள்ளவும், பணியின் அவசர அவசியம் கருதி ஆணையாளர் (கூ.பொறுப்பு) மற்றும் தனி அலுவலர், உடுமலைப்பேட்டை நகராட்சி அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்<br><u>அலுவலகக்குறிப்பு :</u> மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண். 1285/2018/இ2</td><td>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது.</td></tr>
<tr><td>13</td><td>602</td><td>இந்நகராட்சிக்கு சொந்தமான சத்திரம் வீதி தரைதளம் கடை எண் 1க்கு 25.05.2018ம் தேதி பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளி கீழ்கண்டவாறு,
<table>
<tr><th rowspan="2">வ.எண்</th><th rowspan="2">ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளி கோருபவர் பெயர் மற்றும் விபரம்</th><th colspan="2">ஒரு மாத வாடகை</th></tr>
<tr><th>பழைய வாடகை</th><th>புதிய வாடகை</th></tr>
<tr><td>1.</td><td>திருமதி.விசாலாட்சி<br>சத்திரம் வீதி தரைதளம் கடை எண் 1</td><td>8000</td><td>9500</td></tr>
</table>
மேற்கண்ட ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளிகளில் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளி கோரிய திருமதி.விசாலாட்சி என்பவரின் ஏலக்கேள்வி ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும், இவர் கோரியுள்ள தொகை பழைய வாடகைக்கு அதிகமாக உள்ளது.</td><td>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது.</td></tr>
</table>

**அலுவலகக்குறிப்பு:–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. திருமாதி.விசாலாட்சி என்பவரது உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி தொகையானது ஏற்கனவே இருந்த வாடகைக்கு அதிகமாக உள்ளது. மேலும் இதனால் நகராட்சிக்கு நிதி இழப்பீடு ஏதும் இல்லை. எனவே நகராட்சிக்கு கூடுதலாக வருவாய் வர உள்ளதால் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.

**ந.க.எண் 10039/2017/அ2**

**14** 603

உடுமலைப்பேட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் செயல்பட்டு வரும் கல்லூரிகள், பள்ளிகள், மற்றும் அதில் பணிபுரியும் பணியாளர்கள், திருமண மண்டபங்கள், தொழிற்சாலைகள், திரையரங்குகள், மதுபான கடைகள், தங்கும் விடுதிகள், வங்கிகள், வணிகம் சார்ந்த கடைகள், அரசு அலுவலகங்களில் பணிபுரியும் அரசு ஊழியர்கள், அரசு சார்ந்த மற்றும் அரசு சாராத நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 12503/2018/ஆர்1 நாள் 21.05.2018 ல் தெரிவித்துள்ளபடி தொழில்வரியை 25% சதவிகிதத்திற்கு குறையாமலும், 35% சதவிகிதத்திற்கு மிகாமலும் மேலும் ஒரு வருடத்திற்கு ரூ.2500/-க்கும் மிகாமலும் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை மறுநிர்ணயம் செய்ய அரசாணை (MS) எண்.11 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் துறை நாள்.12.01.1999-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே, இந்நகராட்சியில் 01.10.2013-ல் தொழில் வரி உயர்வு செய்யப்பட்டு தற்பொழுது 30.09.2018 அன்றுடன் ஐந்தாண்டுகள் முடிவடைவதால் 01.10.2018 முதல் (2018-2019 **இரண்டாம் அரையாண்டு** ) கீழ்க்கண்ட பட்டியலில் உள்ள விபரப்படி தொழில்வரி உயர்த்திக் கொள்ளவும், மாவட்ட அளவிலான தினசரி நாளிதழ் மற்றும் மாவட்ட அரசிதழில் வரி உயர்வு செய்து வெளியிடவும் அதற்குண்டான செலவினத்திற்கும் மன்றதின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | அரையாண்டு பகிர்மானம் | 1.10.2013 முதல் தொழில்வரி பிடித்தம் செய்யப்பட்ட விகிதம் | 1.10.2018 முதல் தொழில்வரி பிடித்தம் செய்ய வேண்டிய விகிதம் |
|---|---|---|---|
| 1 | ரூ.21000 வரை | இல்லை | இல்லை |
| 2 | ரூ.21000 முதல் 30000 வரை | ரூ.118 | ரூ.153 |
| 3 | ரூ.30000 முதல் 45000 வரை | ரூ.294 | ரூ.382 |
| 4 | ரூ.45001 முதல் 60000 வரை | ரூ.586 | ரூ.762 |
| 5 | ரூ.60001 முதல் 75000 வரை | ரூ.880 | ரூ.1144 |
| 6 | ரூ.75001 முதல் அதற்குமேல் | ரூ.1173 | ரூ.1250 |

**அலுவலகக்குறிப்பு**

1. ஏற்கனவே நிர்ணயம் செய்துள்ள தொழில் வரியில் 30% சதவிகிதத்திற்கு குறையாமலும் 35% சதவிகிதத்திற்கு மிகாமலும், ஒரு அரையாண்டுக்கு ரூ.1250 க்கு மிகாமல் உயர்வு செய்ய மன்றம் முடிவு செய்யலாம்.
2. தினசரி செய்திதாள் மற்றும் மாவட்ட அரசிதழில் விளம்பரம் செய்யவும் அதற்கான செலவுத் தொகைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1983/2018/அ3

| | | | |
|---|---|---|---|
| **15** | 604 | நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் K.Dis.No.22581/P3/2016 dated 06.02.2017ன்படி உடுமமைலப்பேட்டை நகராட்சியில் ஒப்பந்த அடிப்படையில் 104 பணியாளர்களை, துப்புரவு பணி மேற்கொள்ள ஈடுபடுத்த மூன்று ஆண்டுகளுக்கு அனுமதி அளித்து வரப்பெற்றது. அதன் அடிப்படையில் ஒப்பந்தம் கோரப்பட்டதில் M/S NEPTUNE AUTOMATION, ERODE என்ற நிறுவனத்தின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியான நாள் ஒன்றிற்கு , நபர் ஒருவருக்கு ரூ.381.22 வீதம் நகரமன்றத் தீர்மான எண் 248 நாள் 29.05.2017ன்படி ஏற்கப்பட்டு, உடுமலைப்பேட்டை நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறை உத்தரவு எண் ந.க.எண் 1187/2015/எச்1 நாள் 30.06.2017ன்படி ஒரு வருட காலத்திற்கு பணி மேற்கொள்ள உத்தரவு வழங்கப்பட்டது. M/S NEPTUNE AUTOMATION, ERODE நிறுவன ஒப்பந்ததாரர் கடிதம் நாள் 23.04.2018ன்படி கடந்த வருடம் அளித்துள்ள குறைவான ஒப்பந்தப்புள்ளியான நாள் ஒன்றிற்கு , நபர் ஒருவருக்கு ரூ.381.22 என்ற விலை விகிதத்திலேயே பணி மேற்கொள்ள சம்மதம் தெரிவித்து கடிதம் அளித்துள்ளார்.<br>மேற்படி ஒப்பந்ததாரர் கடந்த வருடத்தில் பணியில் எவ்வித குறைபாடும் இல்லாத காரணத்தினால் M/S NEPTUNE AUTOMATION, ERODE நிறுவனத்தின் ஒப்பந்தத்தினை மேலும் ஒரு வருட காலத்திற்கு நீட்டிப்பு செய்து வழங்கவும், கடந்த ஒரு வருட காலத்தில் ஏற்ப்பட்ட 4 துப்புரவுப்பணியாளர்கள் பணியிடங்களையும் சேர்த்து, ஏற்கனவே உள்ள 104 பணியாளர்களுடன் மொத்தம் 108 பணியாளர்களை நாள் ஒன்றிற்கு , நபர் ஒருவருக்கு ரூ.381.22 என்ற விலை விகிதத்தில் ஒப்பந்த அடிப்படையில் பணியில் ஈடுபடுத்தவும், அதற்காகும் தோராய செலவினம் ரூ.150.00 இலட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண் **1187 /2015/**எச்**1** | |
| **16** | 605 | இந்நகராட்சி குடிநீர் லாரி எண்.TN78 X 6177-க்கான தகுதிச்சான்று வருகிற **01.08.2018** முடிவுறுவதால், மேற்படி வாகனத்திலுள்ள பழுதுகளை நீக்கிடவும், வாகனம் முழுவதும் புதியதாக பெயிண்டிங் செய்து எழுத்து வேலைகள் மற்றும் ஸ்டிக்கர் ஒட்டுதல் பணிகள் மற்றும் இதர பணிகள் மேற்கொண்டு **2018–2019** ஆம் ஆண்டிற்கு தகுதிச்சான்று புதுப்பித்து கொள்ளவும், தகுதிச்சான்று பெற அரசுத்துறைக்கு (RTO Office) செலுத்த வேண்டிய வரி மற்றும் கட்டணங்கள் உட்பட அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.**46,500/–** (ரூபாய் நாற்பத்து ஆறாயிரத்து ஐநூறு மட்டும்) மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:–** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.**1935**/2018/இ2 | |
| **17** | 606 | உடுமலைப்பேட்டை நகராட்சியில் மேற்கொள்ளப்பட்ட திட்டப்பணிகளான கூடுதல் அலுவலக கட்டுமானப் பணி, குடிநீர் பகிர்மான குழாய்களில் அபிவிருத்தி பணிகள், குடிநீர் பிரதான குழாய்களில் அபிவிருத்தி பணிகள் போன்ற பணிகள் அனைத்தும் நிறைவு பெற்று வருகிற 04.05.2018ம் தேதியன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் காணொலி மூலம் திறக்கப்பட உள்ளது. மேற்கண்ட திறப்பு விழாவிற்கு Stage Decoration, Front Entrance Decoration, Unveiling Board செய்தல் மற்றும் இதர பணிகள் அனைத்தும் குறுகிய காலத்திற்குள் செய்ய வேணடியுள்ளதால் ரூ.**2.50** இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1970 பிரிவு (15) ன் கீழ் மேற்கண்ட பணிக்கு ஆகும் செலவினத்தை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:–** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.**982**/2018/இ1 | |
| **18** | 607 | உடுமலைப்பேட்டை நகராட்சியின் 2016-17ஆம் ஆண்டிற்கான வருவாய் நிதி தணிக்கைப் பத்தி எண் 48/2016-17ல் தணிக்கை மேற்கொண்டமைக்கு தணிக்கைக் கட்டணம் ரூ.58178/- செலுத்தத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி தொகையினை செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு :**<br>அனுமதி வழங்கலாம். மேலும் அவசர அவசியத்தை முன்னிட்டு மன்றத்தின் அனுமதி பெற்று மேற்படி தொகையினை வழங்கலாம்<br>**ந.க.எண் 391/2014/பி1** | |

| | | | |
|---|---|---|---|
| **19** | 608 | (entry text below) | |

அரசாணை எண்.**55** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA2) நாள் **14.05.2014 மற்றும்** அரசாணை எண்.**492** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA2) நாள் **19.09.2013**–ன்படி உடுமலைப்பேட்டை நகராட்சியில் குடிநீர் திட்ட அபிவிருத்திப் பணிகளை (பகிர்மான குழாய்கள் மற்றும் பிரதான குழாய்கள்) மேற்கொள்வதற்கு JICA 2013 -2014 மற்றும் IUDM 2013-2014 திட்டங்களின் கீழ் முறையே ரூ.1787.00 இலட்சம் மற்றும் ரூ.1400.00 இலட்சங்களுக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி செயல்முறை ஆணை எண். **41777/2013–3/பி1** நாள் **26.06.2013 மற்றும்** நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ள கடிதம் செயல்முறைகள் உத்திரவு ந.க.எண். **1297/2016**/P1 நாள் **02.02.2016**–ன்படி நகராட்சியில் புதியதாக கூடுதல் அலுவலகக் கட்டிடம் கட்டுவதற்கு ரூ.191.00 இலட்சத்திற்கு பகுதி-II திட்டத்திலும் மற்றும் கூடுதல் அபிவிருத்திப் பணிகளை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்வதற்கு ரூ.140.00 இலட்சத்திற்கும் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேற்கண்ட குடிநீர் திட்ட பணிகள் அனைத்தும் நிறைவு பெற்று 23.10.2017 முதல் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டு விட்டது எனவும், மேலும் மேற்கண்ட பணிகளுக்கு பணி முடிவுறு அறிக்கையும் பெறப்பட்டு விட்டது. இந்நிலையில் மேற்கண்ட பணிகளுக்கு ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட வேண்டிய பட்டியல் தொகை கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ.எண் | திட்டத்தின் பெயர் | ஒப்பந்ததாரருக்கு மொத்தமாக வழங்க வேண்டிய தொகை | இது நாள் வரை ஒப்பந்த தாரருக்கு வழங்கப்பட்ட தொகை | ஒப்பந்த தாரருக்கு மீதம் வழங்க வேண்டிய தொகை | ஒப்பந்த தாரருக்கு வழங்கப்பட வேண்டிய கூடுதல் வைப்புத் தொகை | மொத்தமாக தேவைப் படும் தொகை |
|---|---|---|---|---|---|---|
| 1. | JICA 2013-2014 | 17.26 | 16.40 | 0.89 | 0.86 | 1.75 |
| 2. | IUDM 2013-2014 | 15.40 | 14.98 | 0.44 | 0.77 | 1.21 |
| | | **32.66** | **31.38** | **1.33** | **1.63** | **2.96** |

மேலும் பார்வை-3 மற்றும் 4ல் கண்டுள்ள நகராட்சியில் கூடுதல் அலுவலகக் கட்டிடம் கட்டுவதற்கு பகுதி-II திட்டத்தில் ரூ.191.00 இலட்சத்திற்கு மட்டும் தான் அரசிடமிருந்து மான்யமாக பெறப்பட்டது. மீதமுள்ள ஒப்பந்தப்புள்ளி கூடுதல் தொகை ரூ.14.00 இலட்சம் மற்றும் அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ளுதல் பணிக்கு ரூ.140.00 இலட்சம் என மொத்தம் ரூ.154.00 இலட்சங்கள் நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்டு விட்டதால் மேற்கண்ட அலுவலகக் கட்டிடத்திற்கு புதியதாக அலுவலக உபயோகப் பொருட்கள் வாங்குவதற்கு நகராட்சியில் நிதிப் பற்றாக்குறை உள்ளது. மேலும் கடந்த 5 ஆண்டுகளில் நகராட்சியால் மேற்கொள்ளப்பட்ட

திட்டப்பணிகளில் நகராட்சியின் பங்களிப்பு தொகை பின்வருமாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| திட்டத்தின் பெயர் | நகராட்சி பங்கு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|
| குடிநீர் பகிர்மான அமைப்புகள் அபிவிருத்தி திட்டப்பணிகள் (JICA 2013-14) | **179.00** |
| குடிநீர் பகிர்மான அமைப்புகள் அபிவிருத்தி திட்டப்பணிகள் (JICA 2013-14) (ஒப்பந்தப்புள்ளி கூடுதல் தொகை) | **64.00** |
| குடிநீர் அபிவிருத்தி திட்டப்பணிகள் (IUDM 2013-14) | **140.00** |
| குடிநீர் அபிவிருத்தி திட்டப்பணிகள் (IUDM 2013-14) (ஒப்பந்தப்புள்ளி கூடுதல் தொகை) | **140.00** |
| சிறப்பு சாலைகள் திட்டம் **2015–2016** | **200.00** |
| நகராட்சி பொதுநிதியில் சாலை பணிகள் மேற்கொள்ளுதல் | **195.00** |
| நகராட்சி அலுவலக புதிய கட்டிடத்தில் கூடுதல் அபிவிருத்திப் பணிகள் | **140.00** |
| குடிநீர் அபிவிருத்தி திட்டப்பணிகளின் கீழ் கூடுதல் மின்உந்துகள் அமைத்தல் | **60.00** |
| தமிழ்நாடு நகர்ப்புற சாலை உள்கட்டமைப்பு திட்டம் 2016-2017 (முதல் கட்டம்) | **408.00** |
| திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் 2016-2017 | **22.00** |
| தமிழ்நாடு நகர்ப்புற சாலை உள்கட்டமைப்பு திட்டம் 2016-2017 (இரண்டாம் கட்டம்) | **250.00** |
| தமிழ்நாடு நகர்ப்புற சாலை உள்கட்டமைப்பு திட்டம் 2017-2018 | **50.00** |
| **மொத்தம்** | **1848.00** |

மேற்கண்ட வளர்ச்சி திட்டப்பணிகளுக்கு நகராட்சியின் பங்களிப்பு தொகை ரூ.1848.00 இலட்சங்கள் ஆகும். மேலும் 7வது ஊதியக்குழுவின் பரிந்துரையின்படி அனைத்து பணியாளர்களுக்கும் ஊதிய உயர்வு அளிக்கப்பட்டதாலும் தற்சமயம் நகராட்சியின் நிதி ஆதாரம் போதுமான நிலையில் இல்லாததால் குடிநீர் திட்டப்பணிகளுக்கு ஒப்பந்ததாரருக்கு வழங்க வேண்டிய தொகை ரூ.296.00 இலட்சம் மற்றும் அலுவலக உபயோக பொருட்கள் TANSI மூலம் வாங்குவதற்கு தேவைப்படும் தொகை ரூ.75.00 இலட்சம் என மொத்தம் ரூ.371.00 இலட்சத்தினை IUDM திட்டத்தின் கீழ் முழு மானியமாக பெறும் பொருட்டு நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களுக்கு கடிதம் அனுப்புவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**:- மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 5649/ 2010/ இ2)**

**20** 609 இந்நகராட்சிக்கு சொந்தமான பொறியாளர் பிரிவு ஈப்பு வாகனம் எண்.TN 41V 9604–ல் புதியதாக லீப் மற்றும் டீசல் டேங்க் போல் மற்றும் பெட் மாற்றியமைக்கும் பணிக்கு அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனைகளிலிருந்து விலைப்புள்ளி ரூ.5,000–க்கு பெறவும், மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் (கூ.பொறுப்பு), உடுமலைப்பேட்டை நகராட்சி அவர்களின் முன்அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடரவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:–</u>** மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்.1601/2018/இ2

<table>
<tr><td>21</td><td>610</td><td>நகராட்சி குடிநீர்நிதி தணிக்கைப்பத்தி எண் 30/2016-17, கல்விநிதி தணிக்கைதடை பத்தி எண் 18/2016.17 ஆகியவற்றில் முறையே குடிநீர் நிதிக்கு பிற நிதிகளிலிருந்து பெறப்பட வேண்டிய தொகை ரூ.21499415/- குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் கல்விநிதிக்கு பிறநிதிகளிலிருந்து பெறப்பட வேண்டிய தொகை ரூ,21931288/. ஆகியவற்றை மாற்றம் செய்திட குறிப்பிடப்பட்டுள்ளது. பிறநிதிகளில் போதிய அளவு நிதி ஆதாரம் இல்லாததால், மேற்படி நிதிகளில் நிதி நிலைமை சரியானவுடன் குடிநீர் நிதி மற்றும் கல்விநிதிக்கு தொகை மாறுதல் செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:- மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண் 488/2018/பி1</td><td></td></tr>
<tr><td>22</td><td>611</td><td>இந்நகராட்சிக்கு சொந்தமான பொறியாளர் பிரிவு ஈப்பு வாகனம் எண்.TN41-V-9604—ல் புதியதாக லீப் மற்றும் டீசல் டேங்க் போல் மற்றும் பெட் மாற்றியமைக்கும் பணிக்கு அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனைகளிலிருந்து விலைப்புள்ளி பெற்றதில் கீழ்க்கண்ட விபரப்படி மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றதை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.<br><table><tr><th>வ.எண்</th><th>விலைப்புள்ளி கொடுத்த நிறுவனத்தின் பெயர்</th><th>விலைப்புள்ளி தொகை</th></tr><tr><td>1.</td><td>M/s.Guruvayurappan Automobiles, Udumalpet</td><td>ரூ.4950.00</td></tr><tr><td>2.</td><td>M/s.J.D & Co, Pollachi</td><td>ரூ.5890.00</td></tr><tr><td>3.</td><td>M/s.P.B.Sheriff Auto Diesel Works, Pollachi</td><td>ரூ.6030.00</td></tr></table><u>அலுவலகக்குறிப்பு :</u><br>1. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் ரூ.4950/—க்கு குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள M/s.Guruvayurappan Automobiles, Udumalpet அவர்களின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.<br>2. வாகன உபயோகத்தின் அவசியம் கருதி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் (கூ.பொறுப்பு), உடுமலைப்பேட்டை நகராட்சி அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்<br>ந.க.எண்.1601/2018/இ2</td><td></td></tr>
<tr><td>23</td><td>612</td><td>உடுமலைப்பேட்டை நகராட்சியில் டெங்கு காய்ச்சல் மற்றும் கொசுக்களால் பரவும் நோய்கள் தடுப்புபணி மேற்கொள்ள வீடு வீடாக கொசுப்புழு உருவாகும் கலன்களை கண்டறிந்து அப்புறப்படுத்தும் பணி மற்றும் நோய்தடுப்பு பணி மேற்கொள்ள 58 நபர்கள் Out Sourcing அடிப்படையில் 2018-2019 நிதியாண்டிற்கு 9 மாதங்களுக்கு பணியில் ஈடுபடுத்தவும், அதற்கான தோராய செலவினம் ரூ.40.00 லட்சம் செலவில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண் 1722/2015/எச்1)</td><td></td></tr>
</table>

(ஒப்பம்) கே.எம். சுதா,
ஆணையாளர்(கூ.பொ) / தனி அலுவலர்

**ஆணையாளர்(கூ.பொ)**
**உடுமலைப்பேட்டை நகராட்சி**